**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 440/2020 P.W. 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சுகவனேஸ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 07.05.2026.**

**புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் தற்போது குளச்சல் அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.01.2019ம் தேதி காலை 11.00 மணியளவில் அரசு பணியில் இருக்கும் போது பூட்டேற்றி அஞ்சல், சுரேஷ் குமார் என்பவரது மனைவி 40வயது மதிக்கதக்க மரியநேசம் என்பவர் அவரது மகன் அஜித் என்பவருடன் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் அதே தினமான 06.01.2019 அன்று அதிகாலை 01.30 மணி அளவில்வீட்டில் வைத்து சிமெண்ட் மற்றும் கல்லால் தாக்கியதாக கூறினார்.

அவரை பரிசோதனை செய்து பார்க்கையில் அவருக்கு கீழ்கண்ட 3 காயங்கள் காணப்பட்டது.

காயம்1. சிதைந்த காயம் 3 x 1.5 x 1 cm அளவில் அவரது இடது பாதத்தின் மேல் பக்கம் இருந்தது.

காயம் 2. சிராய்ப்பு காயம் 10 x 5 cm அளவில் அவரது வலது முழங்கையில் காணப்பட்டது.

காயம் 3. சிராய்ப்பு காயம் 10 x 5 cm இடது முழங்கையில் காணப்பட்டது.

அவரை மேல்சிகிட்சைக்காக முதலுதவிச் செய்து ஆசாரிபள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவருக்கு பாதத்தில் 3 எலும்புகள்

முறிவு காணப்பட்டதால் எலும்பு சிகிட்சை நிபுணரின் கருத்துப்படி அது கொடுங்காயம் ஆகும்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

1. எனது பெயர் சிவனேஸ் அல்ல என்றால் சரிதான், சுகவனேஸ் ஆகும். நான் சிகிட்சை அளித்ததைக் காட்டக்கூடிய ஆவணங்களை கொண்டு வரவில்லை என்றால் சரியல்ல. கொண்டு வந்துள்ளேன். நான் நீதிமன்றத்தில் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பாதிக்கப்பட்ட நபருக்கு முதலுதவி அளித்தவுடன் அன்றையதினமே ஆசாரிபள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான்.

2. நான் எக்ஸ்ரே எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் முதலுதவி மட்டும் செய்ததால் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பது பற்றி கூறமுடியாது என்றால் எலும்பு முறிவு மருத்துவரின் கருத்துப்படி தெரிவித்தேன். எங்களது மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிட்சை அளிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் எலும்பு முறிவு மருத்துவரின் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. நான் குறிப்பிட்ட காயம் 1 இரவு நேரத்தில் கட்டிடம் கட்டும் போது கல் தவறி விழுந்தாலும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அவ்வாறு காலில் கல் விழுந்து அதனால் தவறி விழுந்தால் கைகளில் காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். தற்போது எலும்பு முறிவு மருத்துவரின் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அது என்னிடம் இல்லை.

4. நான் புகார்தாரருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குழந்தைகள் நல மருத்துவர் என்பதால் எலும்பு முறிவு பற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரருக்கு எந்தவிதமான சிகிட்சையும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் என்னிடம் சிகிட்சை பெறுவதற்கு முன்பு வேறு எதுவும் சிகிட்சை பெற்றிருந்தாரா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.